340

# MUNICIPAL COUNCIL IN KALMUNAI - A HISTORICAL PERSPECTIVE.

EASTERN
UNIVERSITY, SRI LANKA.
EXAMINATION BRANCH
22 JAN 2015
VANTHARUMOOLAI,
CHENKALADY.

**NAME:- MISS. NIROJINI PERAMPALAM,**

**REG.NO:- EU/IS/2008/AC/03,**

**INDEX NO:- CS 3403.**

**A DISSERATION SUBMITTED TO THE FACULTY OF ARTS & CULTURE, EASTERN UNIVERSITY, SRILANKA. AS A PARTIAL FULFILLMENT OF THE REQUIREMENT OF THE BACHELOR OF ARTS SPECIALIZED IN HISTORY.**

06 MAR 2015
EASTERN UNIVERSITY, SRI LANKA

**DEPARTMENT OF HISTORY,**

**ARTS AND CULTURE,**

**EASTERN UNIVERSITY,**

**VANTHARUMOOLAI,**

**SRILANKA,**

**2014.**

FAC340
Project Report
Library - EUSL

PROCESSED
Main Library, EUSL

## முன்னுரை

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கலை கலாசார பீடத்தின் வரலாற்றுத் துறையில் சிறப்புக் கற்கை நெறியை நிறைவு செய்யும் பொருட்டு "கல்முனை மாநகர சபை ஓர் வரலாற்று நோக்கு" எனும் தலைப்பின் கீழ் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒரு நாட்டினுடைய வரலாற்றைத் தீர்மானிப்பதில் அதன் அமைவிடத்திற்கும் முக்கியதொரு பங்குண்டு. ஆயினும் இதனால் எல்லா பிராந்தியங்களுக்கும் பாரம்பரிய வரலாறு இருப்பதாக கூற முடியாது. இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்திருக்கும் இலங்கைக்கு பாரம்பரிய வரலாறு, பண்பாடு என்பவற்றில் தனித்துவமான பண்புகள் உண்டு. தென்னாசியாவில் தொடர்ச்சியான வரலாற்று மரபினைக் கொண்டமைந்த நாடு என்ற வகையில் இலங்கைக்கென்று தனித்துவமான சிறப்புண்டு. இலங்கையினுடைய வரலாறு இந்திய வரலாற்று அம்சங்களோடு நெருங்கிய தொடர்புபட்டது. அண்மை நாடென்ற வகையில் இந்திய மரபுகளினையும் உள்ளடக்கிய வகையில் வரலாறு கட்டியமைக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் மிக நீண்ட காலமாகவே உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கூடாக அதிகாரத்தைப் பன்முகப்படுத்தி கீழ்மட்ட மக்களுக்கு அரசாங்க சேவையினை இலகுவாகவும் பயனுறுதிமிக்க வகையிலும் வழங்கும் நடைமுறை காணப்பட்டு வருகின்றது. இவ் உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பிலான மேற்பார்வையும், நிர்வாகவும் 1978ஆம் ஆண்டு 13 ஆவது அரசியல் அமைப்பு திருத்தத்துடன் மாகாண சபைகளுக்கு கொடுக்கப்பட்டது. அவ்வாறான உள்ளூராட்சி மன்றங்களாக மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை ஆகியவை இலங்கையில் காணப்படுகின்றன.

அந்தவகையிலே இலங்கையில் கிழக்கு மாகாணத்திற்குரிய உள்ளூராட்சி மன்றங்களின் வரிசையில் கல்முனை மாநகர சபையும் காணப்படுகின்றது. இச்சபையானது கல்முனை தமிழ் பிரதேச செயலகப் பிரிவு, கல்முனை முஸ்லிம் செயலகப் பிரிவு, சாய்ந்தமருது செயலகப்பிரிவு பிரிவு எனும் பகுதிகளை கொண்டமைந்துள்ளது.

கல்முனை மாநகர சபையானது மக்கள் பங்களிப்பு, வெளிப்படைத்தன்மை, வகைப்பொறுப்பு, சமத்துவம் ஆகிய பண்புகளை கொண்டுள்ளது. இப்பண்புகளை வெளிக்கொணரும் ஒரு ஆய்வாக இவ்வாய்வு வடிவமைக்கப்பட்டுள்ளது.

அந்தவகையிலே உள்ளூராட்சி கட்டமைப்பின் வரலாற்றுப் பின்னணி, கல்முனை மாநகர சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் காணப்படும் சமூகக் கட்டமைப்பு, கல்வி நிலைமைகள், போக்குவரத்து வசதிகள், மக்களின் வாழ்க்கை முறை, கல்முனை மாநகர சபையின் உருவாக்கப் பின்னணி, சபையின் வளர்ச்சி, அதிகாரங்கள், வருமானங்களைப் பெறும் மூலங்கள், கல்முனை மாநகர சபையால் மேற்கொள்ளப்படும்

பணிகள், வேலைத்திட்டங்கள் மற்றும் இச்சபை எதிர்கொள்ளும் பிரச்சினைகள் போன்ற விடயங்களை வெளிப்படுத்தும் ஆய்வாக இவ்வாய்வு வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஆனால் கல்முனை மாநகரத்தினைப் பற்றி இலக்கியங்கள் அதிக தகவல்களினை வெளிப்படுத்தாமை பெரும் குறைபாடாகும். எனினும் கல்முனை மாநகர சபையின் நிர்வாக அறிக்கைகள், பிரதேச சபைகளினது வருடாந்த வெளியீடுகள், பத்திரிகையில் வெளிவந்த கட்டுரைகள், காலத்திற்குக் காலம் வெளிவந்த வரலாற்றாய்வாளர்களது கட்டுரைத் தொகுப்புக்கள், மாநகர சபையின் உத்தியோகத்தர்களுடனான நேர்காணல், மற்றும் இணையத்தள தகவல்கள் போன்றவற்றின் அடிப்படையில் இவ்வாய்வினை வடிவமைத்துள்ளேன்.

இந்நூலானது எதிர்காலத்தில் இது போன்ற முயற்சியில் ஈடுபடுபவர்களுக்கு மூல ஆவணமாக அமையுமென நம்புகின்றேன்.

ஆய்வாளர்.

## பொருளடக்கம்


விடயம் பக்கம்

உறுதியுரை

முன்னுரை......i

நன்றியுரை......iii

அத்தியாயம் : ஒன்று

1.0 அறிமுகம்......2

1.1 ஆய்வு நோக்கங்கள்...... 3

1.2 ஆய்வுக் கருதுகோள்......3

1.3 ஆய்வுப் பரப்பும் காலமும்......3

1.4 முன்னைய ஆய்வுகள்......4

1.5 ஆய்வு மூலங்கள்......4

1.6 ஆய்வுப் பிரச்சினைகள்......4

1.7 ஆய்வுக் கட்டமைப்பு......4

அத்தியாயம் : இரண்டு

2.0 இலங்கையில் உள்ளூராட்சி சபைகளின் தோற்றமும் அவற்றின் தொழிற்பாடுகளும்

2.1 இலங்கையில் மாநகர சபைகளின் தோற்றம்......7

2.2 மாநகரசபைக்கான அங்கத்தவர் தெரிவு முறைமை......11

2.3 இலங்கையில் காணப்படும் இன்றைய உள்ளூராட்சி மன்றுகளும் மாநகரசபையின் அமைப்பாண்மைக் கட்டமைப்பும்...... 13

அத்தியாயம் : மூன்று


2.0 ஆய்வுப் பிரதேசம் அறிமுகம்……………………………………………19

2.1 மாவட்டம் பற்றிய அறிமுகம்……………………………………………19

2.2 கல்முனை மாநகரத்தின் பௌதீக அம்சங்கள்……………………………22

2.2.1 அமைவிடம்…………………………………………………22

2.2.2 தரைத்தோற்றம்……………………………………………23

2.2.3 காலநிலை……………………………………………………24

2.2.4 மண்வளம்……………………………………………………24

2.3.5 கிராம சேவகர் பிரிவுகள்……………………………………25

2.4.6 சனத்தொகை…………………………………………………29

2.4.7 சுகாதாரம்……………………………………………………30

2.4.8 பிரதேச செயலகப் பிரிவுகளின் தோற்றப் பின்னணி…………………… 31

2.3 பொருளாதாரம்……………………………………………………35

2.3.1 விவசாயமும், கால்நடைகளும்……………………………35

2.3.2 கைத்தொழில்…………………………………………………36

2.3.3 மீன்பிடித்தொழில்……………………………………………37

2.4 போக்குவரத்து மற்றும் வீதிகள்…………………………………………39

2.5 தபால் சேவையும் தொலைத்தொடர்பும்…………………………………41

2.6 சந்தைப்படுத்தும் முறைகள்……………………………………………41

2.7 வர்த்தக நிலையங்களும் சேவை நிலையங்களும்…………………………42

2.8 வங்கிகளின் விபரம்……………………………………………………43

2.9 திணைக்களங்களும் சேவை நிலையங்களும்……………………………………………………………..43

2.10 மக்களின் வாழ்க்கை முறை………………………………………………………………………44

அத்தியாயம் : நான்கு

4.0 கல்முனை மாநகர சபையின் நகராட்சி……………………………………………………….. 50

4.1 கல்முனை மாநகரசபையின் தோற்றமும், வளர்ச்சியும்……………………………………………..50

4.2 கல்முனை மாநகரசபையின் அதிகாரப் பிரதேசங்கள்……………………………………………..55

4.3 ஆளணி விபரம்…………………………………………………………………………………..58

4.4 கடமைகளும், பொறுப்புக்களும்……………………………………………………………………..62

4.5 துணைவிதிகளும், அதிகாரங்களும்…………………………………………………………………..73

4.6 வருமானங்கள் பெறும் மூலங்கள்…………………………………………………………………..77

அத்தியாயம் ஐந்து

5.0 கல்முனை மாநகரசபையின் பணிகள்……………………………………………………………..85

5.1 கல்வி தொடர்பான பணிகள்…………………………………………………………………………..85

5.2 போக்குவரத்து வசதி தொடர்பான பணிகள்……………………………………………………..88

5.3 சுகாதாரத்தைப் பேணுவது தொடர்பான பணிகள்……………………………………………..90

5.4 பொது பயன்பாட்டுப் பணிகள்……………………………………………………………………..95

5.5 வருடாந்த வேலைத்திட்டங்கள்………………………………………………………………………..97

5.6 கல்முனை மாநகர சபை எதிர்நோக்கும் பிரச்சினைகள்……………………………………………101

தொகுப்புரை……………………………………………………………………………………..107

உசாத்துணை நுல்கள்……………………………………………………………………………..113

இணையத்தளம்……………………………………………………………………………………..113